[2006 ஜனவரி 25

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட உடுமலை தொகுதியிலே மலைவாழ் பகுதி அதிகமாக உள்ளது. 18 settlement areas அங்கு உள்ளன. அங்குள்ள மலைவாழ் மக்கள், பெண்கள் சுய உதவிக் குழுக்களை அதிகமாக ஆரம்பித்து, அங்கு சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறார்கள். அங்கே திருமூர்த்தி அணைப் பகுதியிலே பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 150 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலம் ஏற்கெனவே விவசாயத் துறையின்மூலமாக எண்ணெய் வித்துத் துறைக்கு எடுக்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தை அங்கே உள்ள மலைவாழ் மக்களுக்குக் கொடுத்து, அவர்களை அந்த மிளகு அதிகரிப்பு திட்டத்தின்மூலமாக வாசனைத் திரவியங்களான மிளகு போன்றவற்றை உற்பத்தி செய்வதற்குரிய ஏற்பாடுகளை, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், செய்வதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நல்ல ஆலோசனையை மாண்புமிகு அம்மாவினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, தாயுள்ளத்தோடு அது பரிசீலிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

106—

மாணவர் விடுதி

*** 33509—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2006 ஜனவரி 25]

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர். அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரம் ஒரு சிறப்பு வாய்ந்த நகரம். இந்த நகரிலே—கலை நகரமாக இருக்கிற நகரிலே-- சிற்பக் கலைக் கல்லூரி தொடர்ந்து செயலாற்றி வருகிறது. இந்தக் கல்லூரியிலே, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து மாணவர்கள் படித்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த நகரைச் சுற்றி 3 வட்டங்கள் இருக்கின்றன. அந்த 3 வட்டங்களிலும் மாமல்லபுரம், புதுப்பட்டினம், திருக்கழுக்குன்றம், சதுரங்கப்பட்டினம், மணமை, வாயலூர், வெங்கப்பாக்கம் ஆகிய பகுதிகளிலே உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் ஏராளமாக இருக்கின்றன. அங்கே பிற்படுத்தப்பட்டோர்களுக்கென்றோ அல்லது தாழ்த்தப்பட்டவர்களுக்கோ இதுவரையிலே எந்தவித மாணவர் விடுதியும் இல்லை. எனவே, தமிழக அரசாங்கம் உடனடியாகப் பரிசீலித்து அங்கே பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை அமைக்க முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகில் செங்கல்பட்டு, நந்திவரம் போன்ற பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோருடைய மாணவர் விடுதி இருக்கிறது. அதில் 50 மாணவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். எனவே, கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோருடைய மாணவர்களின் கூடுதல் சேர்க்கையை வரலாறு காணாத அளவிற்கு அந்த மாணவர்களைச் சேர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் 3,275 கூடுதல் இடங்களைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொண்டு, தேவைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டுக்கும், மாமல்லபுரத்திற்கும் ஏறக்குறைய 38 கிலோ மீட்டர் இருக்கிறது. மாமல்லபுரத்திற்கும், நந்திவரத்திற்கும் ஏறக்குறைய 55 கிலோ மீட்டர் இருக்கிறது. எனவே, இது முக்கியமான பகுதி. அருகிலே செங்கற்பட்டு வட்டத்திலே இருக்கிற மாணவர்களுக்கும், அருகிலே செய்யூர்

வட்டத்திலே இருக்கிற மாணவர்களுக்கும் இது மையமான பகுதி. ஏற்கெனவே சொன்ன 10–க்கு மேற்பட்ட பள்ளிகள் எங்களுடைய இந்தப் பகுதியிலே இருக்கின்றன, செங்கற்பட்டு தொகுதியிலே இருக்கின்றன. அருகிலே இருக்கிற திருப்போரூர் தொகுதியிலிருந்தும், அருகிலே இருக்கிற மதுராந்தகம் பகுதியிலிருந்தும் இந்த மாணவர்கள் இங்கே வந்து படிக்கிறார்கள். எனவே, இங்கே இந்த மாணவர் விடுதியை உடனடியாக அமைப்பதற்கு அரசு ஆணையிட வேண்டுமென்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது 50 மாணவர்களையாவது விடுதியில் சேர்ப்பதற்கான தகுதி வேண்டும். அந்த அடிப்படையில் தேவை இருக்கின்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 107, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

107—

மாணவர் விடுதி

*** 36066—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம், பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித்தர மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு உத்தரவு வழங்கி இருக்கிறது என்ற